www.agaram.lk

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# கல்விஅபிவிருத்திக்கும்தேர்வுக்குமான சபை
# இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018
# கர்நாடகசங்கீதம்

தரம் - 10 நேரம் -3 மணித்தியாலங்கள்

பகுதி 1

கவனிக்க வேண்டியவை

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிக.

Agaram.LK - Keep your dreams alive!

1. நுண்கலைகளில் மிகவும் மேன்மையானது.
   1.சங்கீதம் 2.நடனம் 3.சிற்பம் 4.நாடகம்
2. ஜன்னிய இராகங்களின் பிரிவுகள்.
   1. 06 2. 05 3. 07 4. 08
3. ஏல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக வரும் இராகம்.
   1. கல்யாணி 2. தோடி 3. பிலஹரி 4. மோகனம்
4. சிருங்கார ரசத்தை வெளிப்படுத்தும் உருப்படி.
   1. ஜாவளி 2.அஷ்டபதி 3.இராகமாலிகை 4. பதம்
5. வர்ணத்தின் எத்துக்கடைப் பல்லவி.
   1. சரணம் 2. முத்தாயிஸ்வரம் 3.சிட்டாஸ்வரம் 4.பல்லவி
6. சிறிய பாடல்களுக்கு இசை அமைக்கும் போது மாணவர்களிடத்தில் மேம்படுவது.
   1. நடிக்கம் திறன் 2. இரசிக்கும் திறன் 3. ஞாபகத் திறன் 4.ஆக்கம் திறன்
7. “ முருகா ” என்ற ஆதி தாள வர்ணத்தின் இராகம்.
   1. மோகனம் 2. கல்யாணி 3. மத்தியமாவதி 4. ஆரபி
8. தற்காலத்தில் வழக்கத்தில் உள்ள பண்கள்.
   1. 52 2. 28 3. 24 4. 12
9. சபாகான உருப்படி.
   1. கீதம் 2. அலங்காரம் 3. கீர்த்தனை 4. மேல்ஸ்தாயிவரிசை
10. கல்யாணி இராகத்தின் மேள எண்.
    1. 15 2. 29 3. 65 4. 72
11. ஹிந்துஸ்தானி இசையில் காபிதாட் எனப்படும் இராகம்.
    1. கல்யாணி 2. மோகனம். 3. பிலஹரி 4. கரஹரப்பிரியா
12. முதன் முதலில் மனித பார்வைக்கு வந்த பிரதி மத்திம இராகம்.
    1. சங்கராரணம் 2. கல்யாணி 3. முாயாமாளவகௌளை 4. பந்துவராளி
13. நாயன்மார்களால் தேவார திருப்பதிகங்கள் பாடப்பட்ட காலம்.
    1. 7ஆம் 8ஆம் நூற்றாண்டு 2. 9ஆம் 10ஆம் நூற்றாண்டு
    3. 20ஆம் நூற்றாண்டு 4. 14ஆம் நூற்றாண்டு

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

14. வாத்திய த்ரயத்தில் காணப்படும் துளைகருவி
 1. வீணை 2. புல்லாங்குழல் 3. நாதஸ்வரம் 4. மிருதங்கம்
15. வில்லுப்பாட்டின் பிரதான வாத்தியம்.
 1. நாண் 2. விற்கடம் 3. இருகோல்கள் 4. உடுக்கை
16. ஸரீகா / ஸாரிகா / மா / மா // அலங்காரத்தின் 5 வது வரி.
 1. ரிகாமா / ரீகமா / பா / பா // 2. நிதாபா / நீதபா / மா / மா //
 3. பதாநீ / பாதநீ / ஸ்ாஸ்ா // 4. தபாமா / தாபமா / கா / கா //
17. " * " இக் குறியீடு.
 1. அன்னியஸ்வரம் 2. வர்ஜராகம் 3. வுக்ர ராகம் 4.கோமள ஸ்வரம்
18. " அமரர் பணியும் " என்ற பாடலின் ஆரம்பம்.
 1. கக / பாபா // வர வீணா 2. தப / தஸ்தப // கண நாதா
 3. ரிஸரிம / பா / பா // சிவபெரு மா னே 4. ஸரிகா / பா / பா / அன்பே தா ன்
19. அப்பியாச கானம் கற்பிக்கப்படுவது.
 1. ஆரம்ப பயிற்சிக்காக 2. இசைக் கச்சேரிக்காக
 3. நாட்டியத்திற்காக 4. மெல்லிசைக்காக
20. " இனி நமக்கொரு " என்ற கீர்த்தனையை இயற்றியவர்.
 1. பொன் ஸ்ரீ வாமதேவன் 2. மாயூரம் வேதநாயகம் பிள்ளை
 3. டைகர் வரதாச்சாரியார் 4. புரந்தரதாஸர்
21. மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண அவரோகணம்.
 1. ஸரிகபதஸ் - ஸ்தபகரிஸ 2. ஸரிமபதஸ் - ஸ்தபமரிஸ
 3. ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ 4. ஸகமபநிஸ் - ஸ்நிபமரிஸ
22. அடதாள அங்கங்கள் .
 1. 1O1 2. 11OO 3.1UO 4. 1O11
23. "சங்கீத சுதாகரம்" இயற்றியவர்.
 1. அருணகிரி நாதர் 2. ஹரிபாலர் 3. தியாகராஜர் 4.முத்துத்தாண்டவர்
24. பண் பழம் பஞ்சுரம் என்பது.
 1. மோகனம் 2. சங்கராபரணம் 3. மத்தியமாவதி 4. கம்ஸத்வனி
25. சந்தப்பாவலர்.
 1. ஹரிபாலர் 2. புரந்தரதாஸர் 3. அருணகிரிநாதர் 4. முத்துத்தாண்டவர்
26. ஏகத்வனி வாத்தியம்.
 1. புல்லாங்குழல் 2. தம்பூரா 3. வீணை 4. மிருதங்கம்
27. கர்நாடக சங்கீதம், ஹிந்தஸ்தானி சங்கீதம் என்ற பிரிவுகள் ஏற்பட்ட காலம்.
 1. 15 ஆம் நூற்றாண்டு 2. 10 ஆம் நூற்றாண்டு
 3. 8 ஆம் நூற்றாண்டு 4. 14 ஆம் நூற்றாண்டு
28. திருவிசைப்பா பாடப்படும் இராகம்.
 1. மோகனம் 2. சங்கராபரணம் 3. ஆனந்தபைரவி 4. பிலஹரி
29. தாய் இராகத்தின் ஸ்லரஸ்தானங்களை மட்டும் எடுத்துக் கொள்ளம் இராகம்.
 1. பாஷாங்கம் 2. ஊபாங்கம் 3. வக்ரம் 4. வர்ஜம்
30. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்டது.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

1. அலங்காரம் 2. வர்ணம் 3. கீர்த்தனை 4. கீதம்

31. தமிழ்ப் பதங்களில் பாடப்பட்டுள்ள கடவுள்.
1. முருகன் 2. அம்மன் 3. கிருஸ்ணன் 4. சிவன்

32. புராணம் பாடப்படும் இராகம்.
1. பிலஹரி 2. கல்யாணி 3. மத்தியமாவதி 4. மோகனம்

33. “ பெருமாளே ” என முடிவடையும் உருப்படி.
1.தேவாரம் 2. திருப்புகழ் 3. புராணம் 4. கீர்த்தனை

34. தைவதாந்திய இராகம்.
1. நவரோஜ் 2. குறிஞ்சி 3. நாதநாமக்கிரிய 4. கமாஸ்

35. ஆலயங்களில் அதிகாலையில் பாடப்படுவது.
1. தேவாரம் 2. திருவாசகம் 3. புராணம் 4. திருப்பள்ளியெழுச்சி

36. விக்ருதி அல்லாதது.
1. ஸ,ப 2. ரி,க 3. ம,த 4. த,நி

37. திரியாங்கங்களும் வரும் தாளம்.
1. ஆதி 2. ஜம்பை 3. ரூபகம் 4. ஏகம்

38. ஸ்வரத்தின் தமிழிசைப் பெயர்.
1. கோவை 2. நிலை 3. வேள்வி 4. ஸ்தாயி

39. ஸ்வரங்கள் விலக்கப்பட்டிருத்தல்.
1. வக்ரம் 2. வர்ஜம் 3. பாஷாங்கம் 4. உபாங்கம்

40. ஸா;;ரிகாமபா;,மாகரீ,ஸா என்ற ஸ்வரக் கோர்வையின் மாத்திரைகள்.
1. 23 2. 24 3. 21 4. 22

( 40 x 1 = 40 புள்ளிகள் )

## பகுதி 11

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக

1. வில்லுப்பாட்டுப் பயிற்றுவிப்பவரை எவ்வாறு அழைப்பர்?
2. “ உற்றுமை சேர்வது ” எனும் தேவாரத்தை அருளியவர்?
3. தற்காலத்தில் வழகிலுள்ள பண்களின் தொகை யாது?
4. கல்யாணி இராகத்தினை கிந்துஸ்தானி இசையில் எவ்வாறு அழைப்பர்?
5. பஜனைப் பத்ததியின் தந்தை யார் ?
6. திறம் என அழைக்கப்படுவது யாது?
7. மேளகர்த்தா இராகங்கள் எத்தனை?
8. திருத்தாண்டகம் பாடப்படும் இராகம் ?
9. மகேந்திர வர்மன் பெற்ற விருதுகள் இரண்டு தருக.
10. வர்ணத்தின் வகைகள் எவை?

[1+1+1+1+1+1+1+1+2+12= 12 புள்ளிகள்]

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

2) பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு பின்வரும் விடயங்களின் அடிப்படையில் விரிவான இட்சணம் தருக.

1. மேள எண்
2. ஆரோகண, அவரோகணம்
3. ஸ்வரஸ்தானங்கள்
4. விசேட அம்சங்கள்
5. உருப்படிகள்
6. சஞ்சாரம்

[1+1+3+3+2+2 = 12 புள்ளிகள்]

3)

1. வாத்திய த்ரயத்தில் இரண்டாவதாக இடம் பெறும் இசைக் கருவி எது?
2. அவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிக்க.
3. அவ்வாத்தியத்தின அமைப்பினை விளக்குக.
4. இவ்வாத்தியத்தினை வாசித்து பிரபல்யம் அடைந்த கலைஞர்கள் இருவரின் பெயர்களைத் தருக.

[1+5+4+2 = 12 புள்ளிகள்]

4) 7ஆம் 8ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னனியை விளக்குக.

[12 புள்ளிகள்]

5)

1. தேவார முதலிகள் யாவர்?
2. அவர்கள் வாழ்ந்த நூற்றாண்டைக் குறிப்பிடுக
3. பண், பண்ணியம், திறம் திறத்திறம் ன்பவற்றின் வகைகளைக் குறிப்பிடுக.
4. பகற்பண், இராப்பண், பொதுப்பண் என்பவற்றை அட்டவனைப் படுத்துக.

[3+3+3+3 = 12 புள்ளிகள்]

6) வர்ணத்தின் இலட்சணத்தைத் தருக.

[12 புள்ளிகள்]

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk